1359

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 SEP 1940
MADRAS

Reg. No. M. 1354.

# போதக விஷய பூங்கொத்து

மாதமோருமுறை மலரும்.

அறிவு ★ உழைப்பு
ஒழுக்கமே திறமை
சேசுநாதா நேச மாதா சூசை நாதா

கொத்து 31

மலர் 2

*Editor & Publisher:*
Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,
*R. C. Secondary Training School, Trichinopoly.*

15 ஆகஸ்டு 1940

...றை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

தனிப்பிரதி அணு $1\frac{1}{4}$.

3L
ஊ2H, N111PP
N40. 31·2
182465

# BODHANA VISHAYA POONGOTHU

## Magazine
### of
## Educational Topics & School Methods.

### பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பத்திராதிபர் குறிப்புகள் ... ... | 33 |
| 2. | சென்னை கல்வி இலாகா ... ... | 35 |
| 3. | கவிஞனமைத்த காட்சிசாலை ... ... | 37 |
| 4. | பாடக் குறிப்பு ... ... ... | 39 |
| 5. | விகடத் துணுக்குகள் ... ... ... | 42 |
| 6. | கல்வித் துறையில் கற்கும் கைவேலைகள் ... | 43 |
| 7. | 'பீரோக்களிலெல்லாம் சிறந்த பீரோ' ... | 47 |
| 8. | ஹிட்லரின் போரும் பிரிட்டனுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகளும் ... ... | 50 |
| 9. | கண்டுகளித்த காட்சிகளின் மாட்சியுரை ... | 58 |
| 10. | நம் பாடசாலை நிகழ்ச்சிகள் .. ... | 59 |
| 11. | பால ஸங்கீத வாசகம் ... ... ... | 60 |
| 12. | யோசனாவிருத்திச் செய்யுள் ... ... | 63 |
| 13. | மதிப்புரை ... ... ... | 64 |


Imprimatur: ✠ JAMES,
*Bishop of Trichinopoly.*


தேவை ! ஏஜெண்டுகள் தேவை !

எமது "போதனாவிஷயப் பூங்கோத்து" பத்திரிகையை எங்கள் பிரதிநிதிகள் ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பின்வரும் விலாசத்திற்கு ஒரு அணா ஸ்டாம்புடன் உடனே எழுதவும்.

பத்திராதிபர்,
போதனாவிஷயப் பூங்கோத்து,
R. C. போதனாமுறைப் பாடசாலை, திருச்சி.



# போதனா விஷயப் பூங்கொத்து

கோத்து 31]  15 ஆகஸ்டு 1940  [மலர் 2

## பத்திராதிபர் குறிப்புகள்

1. சாரணர் இயக்கம் (Scout Movement): நமது போதனாமுறைப் பாடசாலையில் சென்ற மாதத்திலிருந்து சாரணர் இயக்கம் துவக்கப்பட்டது. இதற்கு முன்னால் இந்தச் சாரணர் இயக்கம் இருந்துவந்ததென்றாலும் இது "அகில இந்திய சாரணச் சங்கத்தோடு" (All India Boy Scout Association) இதுவரை இணைக்கப்படவில்லை. சென்ற மாதத்திலிருந்து நமது போதனாமுறைப் பாடசாலையின் சாரணப் படை "அகில இந்திய சாரணச் சங்கத்தோடு இணைக்கப்பட்டிருக்கின்றது. நமது சாரணப் படையில் 24 சாரண வீரர்கள் சேர்ந்து இருக்கின்றார்கள். இவர்கள் அதிஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், சாரணர் விளையாட்டிலும், வேலையிலும் ஈடுபட்டிருக்கின்றனர். எமது சாரண வீரர்கள் பிறருக்கு ஊழியம் செய்யும் தொழிலை மேற்கொண்டு அநேகருக்கு உதவியளிப்பார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

2. நூல்நூற்பது: சென்ற ஜூலை மாதத்திலிருந்து நமது போதனாமுறைப் பாடசாலையில் தக்ளியால் நூல்நூற்கும் கைத்தொழிலும் துவக்கப்பட்டிருக்கிறது. நவீன கல்வி முறைப்படி நாம் கற்கும் கல்வியானது நமது பிற்கால ஜீவனத்திற்கு வழி காட்டக்கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பது அநேக கல்வி ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம். "பொருளீட்டும் கல்வியே உண்மைக் கல்வி" என்பதையுணர்ந்து தக்ளியால் நூல் நூற்கும் தொழிலும் கற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நம் போதனாமுறைப் பள்ளிக்கூடத்தில் செய்யப்பட்டிருக்கின்றன.

3. தேனீ வளர்த்தல்: தேனீ வளர்த்தல் நம் மாணவர்களுக்கும் மிகவும் பிரியமான உபதொழில். தேனீ வளர்த்தல் என்றது மிகவும் சுலபமான காரியமல்ல. ஜீவப்பிராணிகளிடத்து அதிக அன்புடையவர்கள்தான் இத்தொழிலில் பெரிதும் இன்பத்தை நுகர்வார்கள் என்பது யாவரும் அறிந்த விஷயமே. மிகவும் உபயோகமானதும் சந்தோஷகரமானதுமான தொழில்களில் மிகச் சிறந்தது "தேனீ வளர்த்தலும் தேன் சேர்த்தலுமே" ஆகும் (Bee Keeping and Honey gathering). போதனமுறைப் பாடசாலையிலுள்ள சிங்காரத் தோட்டத்தில் ஒரு தேன் கூண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. ராணி ஈ ஒன்று கொண்டுவரப்பட்டு இதில் விடப்பட்டிருக்கிறது. தேன் அடையில் வேலைசெய்யும் தேனீக்கள் (Workers) இருக்கின்றன. இந்தத் தேனீக்கள்தான் வெளியே சென்று பற்பல புஷ்பங்களிலிருந்து தேன் எடுத்துவந்து தேன் அடையில் சேர்க்கின்றது. நமது மாணவர்களுக்கு இவ்வுபதொழில் மிகவும் இன்பத்தைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

## போதனு விஷயப் பூங்கோத்து தினம்

சென்ற ஜூன் மாதம் 23-ந் தேதி தூரிபுஷ்டத்தில் போதனு விஷயப் பூங்கொத்து தினம் வெகு விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. அன்று காலை 11-மணிக்கு தூரிபுஷ்ட சங்க நிலையத்தில், ஸ்ரீ S. S. வேலாயுதம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் ஸ்ரீ பி. எஸ். ஹரிகிருஷ்ணன் மேற்படி தினத்தைப்பற்றிப் பேசினர். பின் நமது பத்திரிகையை ஆசிரியர்களிடம் பரப்பவேண்டிய முயற்சி எடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதன்பிறகு லோக மாதா சங்க மாணவர் பாப்பரசர் கொடியுடனும் பூங்கொத்துப் பிரதிகளுடனும் ஊர்வலம் வந்தார்கள். பவனி செல்லுகையில், "போதனுவிஷயப் பூங்கொத்து நீடூழி வாழ்க" "பத்திராதிபருக்கு ஜே" என்றும் ஆர்ப்பரித்தார்கள்.

நமது பத்திரிகையின்மீது இத்தகைய அபிமானம் காட்டி இவ்வைபவத்தை நடத்தி சிறப்பிக்க பெரும் முயற்சி செய்த தூரிபுஷ்ட சங்கத் தலைவர் ஸ்ரீ A. M. J. மார்டின் அவர்களுக்கும் அங்கத்தினர்க்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக. நல்ல பத்திரிகைகளை நாடு முழுவதும் பரப்பி மக்களுள் நன்மை பயக்க பெரிதும் உழைக்கின்ற தூரிபுஷ்ட சங்கம் நீடூழி வாழ்க! தூரிபுஷ்ட சங்கத் தலைவருக்கும் நிர்வாகிகட்கும் ஜே!

182465

18 SEP 1940

## சென்னை கல்வி இலாகா

[Fort St. George Gazette, Part I. B. dated 9th July 1940]

**T.S.L.C. Examination Revised Scheme**: இப்புதிய திட்டம் இவ்வருஷத்திலிருந்து அமுலுக்கு வருகின்றது. இதன் முதல் பரீட்சை **1942**-ம் ௵ மார்ச்சு மாதத்தில் நடைபெறும். ௸ பரீட்சைக்குரிய பாடங்களின் விவரம் இதனடியில் வரும் Group A-ல் காண்க :—

### Group A

#### Secondary Grade

| | Subject | Duration Hours |
|---|---|---|
| 1. | Education I ... ... ... ... | 2 |
| 2. | Education II ... ... ... ... | 2 |
| 3. | English Methods and Texts ... ... | 2 |
| 4. | Special Methods (non-language subjects) I. Mathematics and General Science ... | 3 |
| 5. | Special Methods (non-language subjects) II. History and Civics and Geography ... | 3 |
| 6. | A Language of the Presidency (Methods and Texts) ... ... ... | $2\frac{1}{2}$ |

#### Elementary Grade

| | | |
|---|---|---|
| 1. | Child Nature and Education (பிள்ளைகளின் இயற்கை சுபாவங்களும் இளைஞர் கல்வியும்) ... | 2 |
| 2. | School Administration (பாடசாலை நிர்வாகம்) ... | 2 |
| 3. | Methods of Teaching (போதனா முறைகள்) | |
| | (1) Language (Texts) (பாஷை பாடம்) ... | $2\frac{1}{2}$ |
| | (2) Elementary Mathematics (ஆரம்பக்கணிதம்) ... | 2 |
| | (3) Nature Study and Gardening (இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்) ... ... | 2 |
| | (4) Indian History and Civics (இந்துதேச சரித்திரமும் அரசாங்க முறையும்) ... ... | 2 |
| | (5) Geography (பூகோளம்) ... ... | 2 |
| 4. | Rural Social Problems (கிராம சமூகப் ப்ரச்னைகள்) ... | 2 |

### Group B

The subjects are Music, Handicrafts, including Drawing, and Physical Training (சங்கீதம், சித்திரம் உட்பட கைவேலைகள், தேகப்பயிற்சி). இப்பாடங்கள் அரசாங்கப் பரீட்சைக்கு

இல்லை. ஆனால் பாடசாலைப் பாடங்களாக மாத்திரமே போதிக்கப் படும். ஷை Group A-ல் உள்ள பாடங்களே அரசாங்கப் பரீட்சைப் பாடங்கள் என்பதையறியவும்.

* * *

**Old Scheme** பழைய திட்டம் 1940-ம் ஹூ மார்ச்சு மாதத்தில் நடைபெற்ற T.S.L.C. பரீட்சையில் தவறிப்போன வர்களும், அதற்கு முந்திய வருஷங்களில் தவறிப்போனவர் களும், முன்போல் கீழ்வரும் பாடங்களில் பரீட்சை எழுதித் தேறவேண்டியவர்களாவர்.

**Secondary Grade:**

1. Organisation and Discipline.
2. General Principles of Education.
3. Methods of Teaching Subjects.
4. Drawing and Blackboard Work.

**Elementary Higher Grade:**

1. பாஷை (First Language).
2. ஆரம்பக் கணிதம் (Elementary Mathematics).
3. இயற்கைப் பாடம் (Nature Study).
4. சமூக சாஸ்திரம் (Elem. Sociology).
5. பூகோளம் (Geography).
6. இஷ்டப் பாடம் (Optional). இந்துதேச சரித்திரம் அல்லது ஆங்கிலம் அல்லது இந்திய சங்கீதம் (Indian History or English or Indian Music).

குறிப்பு: (1) 1941-ம் வருஷத்தில் பரீட்சை எழுதும் மாணவர் கள் அவர்க்கென குறித்துள்ள பரீட்சை பாடப்புத்தகங்களைக் கற்க வேண்டும்.

(2) தற்போதுள்ள பழைய திட்டத்தின்படி ஷை பாடங்களில் 1941, 1942, 1943 ஆகிய இந்த மூன்று வருஷ கெடுவுக்குள் ஷை பரீட்சை எழுதித் தேறாதவர்கள் அதற்குப் பிறகு அதாவது 1944-ம் வருஷத்திலிருந்து ப்ரைவேட் மாணவர்களாக புதுப்பாட திட்டத்தின் படி அதிலுள்ள எல்லாப் பாடங்களிலும் பரீட்சை எழுதவேண்டும்.

(3) இன்னும் பரீட்சை எழுதித் தேறவேண்டியவராயிருக்கும் எலிமெண்டரி லோவர் கிரேடு மாணவர்களுக்கு 1941-ம் ஹூ மார்ச்சு மாதம் நடக்கும் பரீட்சைதான் கடைசி பரீட்சையென்பதை அறிவார் களாக. அதற்குப்பிறகு லோவர்கிரேடு பரீட்சை என்பதே கிடையாது.

# கவிஞனமைத்த காட்சிசாலை

(M. A. S. Udayar, Tamil Pundit.)

மாநில மடந்தையின் மடியகத்திலங்கு மாந்தருட் சிறந்தோர் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாட்களுள் தாம் கண்டனவும், கேட்டனவும் செய்தனவுமாயவற்றுள் மக்கட்கிதம் பயப்பனவாய் விளங்குவன எவையோ அவற்றைத் திரட்டிவைத்து "தாமின்புறுவதுலகின்புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்" என்னும் தமிழ்மறைக்கோரிலக்கியமாய் நிற்பர்.

இத்தகைய பேரறிவாளரின் அருமுயற்சியின்றேல் இன்று நம் வாழ்க்கைநிலை பல்லாயிரமாண்டுகட்கு முற்பட்ட நம் முன்னோரின் ஆரம்ப நிலையையே பின்பற்றியதாயிருக்கும் அன்றோ? எனவே அந்நிலையை மாற்றி உயர்நிலையடையச்செய்த நம் முன்னோர்களின் பெருவழியை நாமுங் கற்றுணர்ந்து கடைப்பிடித்தொழுகல் இன்றியமையாததாகும்.

அவ்வருங்குணச் செல்வர் பலருள் ஒருவரது ஓர் செயலை ஈண்டு ஆராய்வாம். கண்டுகளித்தல் மாந்தர் தனியியற்கையென்பதுணர்ந்த ஓர் கவிச்செல்வர், உலகின் ஒவ்வோரிடங்களிலும் தனித்தனியமைக்கப்பட்டிருக்கும் காட்சிச்சாலைகளையும், அவற்றால் மக்கள் உடனலம் ஆன்மனல முதலியன பெறுதலையும் கண்டு தாமும் அத்தகையதோர் சாலையையமைக்க விரும்பி, மிக முயன்று அரிதிற்றேடி யரும்பெறற் பொருட்கள் பலவற்றையமைத்துள்ளார். அப்பொருளைப் பார்த்த, அல்லது கேட்ட அளவில் அப்பொருட்டோற்ற முற்றும் திரையிலியங்கும் படக்காட்சிபோன்று நம் மனத்திரையிலியங்கி நமக்குப் பேரின்பம் பயக்கின்றது. அப்பொருளாவது:—

பாம்புருக்கொண்டு மனு முதல்வனை யேமாற்றிய பேயினத்தால் இழந்த சுதந்தரத்தை மீட்டுமம்மனுமக்கட்களிப்பான் வேண்டி, மனுவுருவெடுத்த தனிமுதற் கடவுளைத் தந்நலம் விரும்பும் மெய்ந்நிலையில்லாப் பாதகராய யூதர்கள் குற்றஞ்சாட்டிக் கொலைபுரிவான் விரும்பிப் பாரச்சிலுவையைத் தோளிற்சுமத்திக் கல்வாரிமலைக்குக் கொண்டுசென்றனர். ஆங்கடைந்ததும், அப்பெருமானைச் சிலுவைமேற் கிடத்தி, அவரது கரத்தையிழுத்து வைத்து ஓர் ஆணியைத் திறம்பட அடித்தனர். பின்னர் இடக்கரத்திலும் ஓர் ஆணியையடித்தற்பொருட்டு அக்கரத்தை யிழுத்துவைத்தனர். அச்சிலுவையின் பாகங்களோ முன்னரே துளையிடப்பெற்றிருந்தன. பெருமான் இடக்கரமோ அத்துளைக்குச் சிறிது குறைவாயிருந்தது. அஃதுணர்ந்த வன்மனக் கசடர், அவ்விடக்கரத்தை யிழுத்துப் பொருத்தி ஓர்

ஆணியை அடித்தனர். பின்னர் அப்பெருமானின் இரண்டு சீர்பாதங்களையும் ஓர் பாதம்போற் பொருத்தி அவற்றினும் ஓர் ஆணியையடித்தனர். மீட்டும் அச்சிலுவையைப் புரட்டிக் கவிழ்த்து அடிக்கப்பெற்ற ஆணிகள் கழன்றுவிடாவண்ணம் அவற்றை வெளிப்புறந் தோன்றுமாறு மிதித்து மடக்கி, இரு பெருங் கொடிய கள்வருக்கிடையே தூக்கி நிறுத்தினர். மேலும் ஆவியகன்றதோ இன்றோ எனச் சோதித்தறியவேண்டிக் கூரிய வேலொன்றால் அவ்விறைவர்தம் திருவிலாவிற் குத்தினர். இன்னண செயல்களால் இறைவனது கரங், கால், விலாக்களில் ஐந்து காயங்கள் தோன்றின. இந்நிகழ்ச்சிகளைத் தாங் கற்றுக் கேட்டறிந்தவாறு பெரியதோர் படம் எழுதித் தம் கவிப்பொருட் காட்சிச்சாலையுள் அமைத்திருக்கின்றார். அவர் வரைந்த கவிப்படக்காட்சியை ஈண்டு நோக்குக :—

"சிலைத்தடவரையிற் கொலைப்படச் சுமந்த
சிலுவைமேற் கிடத்தி யுன் வலது
திருக்கரந் தன்னை யிழுத்ததிலாணி
திறப்படப் பெலத்துடனறைந்து
இலக்குறு துளைக்குள் இடக்கையெட்டாதா
விழுத்தொராணியை யறைந்துயர்ந்த
இருபதந்தம்மை யொருபதம் போலா
இருத்தியோராணியைப் பொருத்திக்
கொலைப்படக் குருசைக் கவிழ்த்திமேன் மிதித்துக்
கூர்முனை யாணிகள் மடக்கிக்
குவலையந்தனக்கு நடுவுறு மலைமேற்
கொடுங்கள்வர் கழுவினுக்கிடையில்
அலைத்துடல் குலுங்க எடுத்துற நாட்டி
யயிலினாலுன்விலாத் திறந்த
ஐந்துகாயத்தை நெஞ்சகத்திருத்தி
ஆளுவாய் சேசுநாயகனே."

என்பது. இக்கவிப்படம் கண்டார்க்குங் கேட்டார்க்கும் இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன் னிகழ்ந்தவற்றை நேரிற் காணுமாறு செய்வித்தலோடு மனத்தையும் அனலிடை மெழுகாயுருக்கி ஆன்மனலத்தைப் பெருக்கிப் பேரின்ப நிலையடையச் செய்தலை எவரே மறுக்கவல்லார்.

இத்தகைய காட்சிச்சாலையுட் புகுந்து கண்டுகளியா வாழ்வுடையார் செயல் பயனற்றதென வுணர்ந்து, ஒவ்வொருவரும் பயனுறு செயலுடையாராத் திகழ இறைவனின்னருள் பயப்பானாக.

## பாடக் குறிப்பு

### (V. M. Sammanasu.)

### (தமிழ் எழுத்துப் போதித்தல்)

வகுப்பு: I.
பாடம்: தமிழ்.
பாகம்: எழுத்துப் போதித்தல்.
தலைப்பு: த (த்) என்ற எழுத்துக்கள்.
நேரம்: 25 நிமிஷம். (ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனி.)

**பொது நோக்கம்:** சிறுவர்களுக்குப் பழக்கமான உபயோகமுள்ள வார்த்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்தலும், தமிழ் "நெடுங்கணக்கு" (Alphabet) வரிசையை அறியச் செய்தலும்.

**தனி நோக்கம்:** த (த்) என்ற எழுத்துக்கள் அடங்கிய பதங்களைக் கண்டுபிடிக்கவும் (recognize) வாசிக்கவும் எழுதவும் அறியச்செய்தல்.

**உபகரணங்கள்:** பதக்கம் (நிஜப்பதக்கம், அல்லது மாதிரி அல்லது படம்) சிறு தகரத்துண்டு; மண் எண்ணெய் டின், தனித்தனி எழுத்துக்கள், பதங்கள் பதத்தொடர்கள் எழுதிய அட்டைச்சீட்டுகள்; பிள்ளைகள் யாவரும் பார்த்து வாசிக்கத் தகுந்த வாசகப்பிரதி (Reading sheet); வாசகப் பிரதியின் நகல்களாகவுள்ள சிறு வாசக அட்டைகள்; வர்ணச் சாக்குக் கட்டி; வெள்ளைச்சாக்குக்கட்டிகள்.

**முன்னறிவு:** 1. எழுத்துக்கள்: (i) ட (ட்); ப (ப்); ம (ம்); ழ (ழ்); ய (ய்).
(ii) ர (ர்); ச (ச்); க (க்)—(16).

2. வார்த்தைகள்: படம், மடம், பழம், பயம், மயம், மரம், ரசம், சரம், ரகம், பட்டம், மட்டம், ரம்பம், ரப்பர், பட்டர், சட்டம், மச்சம், சமயம், பட்சம், கட்டம், பக்கம், கப்பம், பம்பரம், சப்பரம், சக்கரம், கட்டடம், ரட்சகர்.—(26)

### I

**பீடிகை:** முன்னறிவிற் கண்ட எழுத்துக்களையும் பதங்களையும் உச்சரிக்க, வாசிக்க, எழுதத் தெரியுமாவெனப் பரிசோ

தித்தல், பின் கொண்டுவந்த "பதக்கத்தை"க் காட்டிப் பெயர் வருவித்து, பதக்கம்பற்றிப் பிள்ளைகளுடன் சம்பாஷித்தல். சம்பாஷணையின்பொழுது ஒவ்வொரு குழந்தையும் திருத்தமாகப் "பதக்கம்" என்று சொல்லும்படி செய்தல்; "பதேக்கம்" எனத் தவறாக உச்சரிக்கும் பழக்கமிருந்தால், வற்புறுத்தித் திருத்தமாக உச்சரிக்கச்செய்தல். பிறகு "பதக்கம்" எனப் பெரிதாக எழுதிய அட்டைச்சீட்டைக் காட்டி இதில் "பதக்கம்" என எழுதியிருப்பதாகச் சொல்லிப் "பதக்கம்" என்பதை மொத்தமாகப் படிக்கச்செய்தல்; நிஜப் பொருளையும் அல்லது அதன் படத்தையும், "பதக்கம்" என எழுதிய மொழிப் படத்தையும் (word-picture) மாறி மாறிக் காட்டி வார்த்தைப் படம் குழந்தைகள் மனதில் பதியச்செய்யவும். உடனே அம் மொழியில் காணப்படும் புதிய எழுத்து இன்னதென (த் என) கண்டுபிடிக்கச்செய்து, அதை வர்ணப்படுத்தி இன்று அந்த எழுத்தை உச்சரிக்கவும், எழுதவும் படிப்போமென்று நோக்கத்தை வெளியிட்டுப் புதியபாடம் துவக்கவும்.

| விஷயம் | முறை |
|---|---|
| 1. உச்சரித்தல்.<br><br>த | "பதக்கம்" என்ற பதத்தைக் க. ப. வில் எழுத; புதிய எழுத்தாகிய "த"வை வர்ணச் சாக்கால் எழுதுக. அதே சமயத்தில் "பதக்கம்" என எழுதிய அட்டைத் துண்டையும் காட்டுக.<br>"ம்" என்ற கடைசி எழுத்தைக் க. ப. விலிருந்து நீக்கிவிட்டு மீதியைப் (i. "பதக்க" என வருவித்து) படிக்கச்செய்க. கையிலுள்ள அட்டைச் சீட்டைக்கொண்டும் அவ்விதமே செய்க.<br>பின் "க" வை நீக்கிப் (ii. "பதக்" என வருவித்துப்) படிக்கச்செய்க.<br>பிறகு, "க்"-ஐ நீக்கிப் (iii. "பத" என வருவித்துப் படிக்கச்செய்க.<br>பிறகு "பத" என்பதைப் பிள்ளைகளை "ப + த" என அசைபிரிக்கச் செய்க. |

| விஷயம் | முறை |
| --- | --- |
| த் | "ப" வை நீக்கி "த" வின் உச்சரிப்பு வருவிக்க. ஒவ்வொரு குழந்தையும் திருத்தமாக உச்சரிக்கும்படி பார்க்கவேண்டும்.<br>பின், "க" மீது புள்ளி வைத்தால், "க்" என்பதையும் "ர" மீது புள்ளி வைத்தால் "ர்" ஆவதையும், அப்படியே மற்றப்புள்ளி மெய்யெழுத்துக்கள் உண்டாவதையும் ஞாபகப்படுத்தி "த" மீது புள்ளிவைத்துப் பிள்ளைகளை உச்சரிக்கச் செய்க. த, த் இரண்டையும் மாறி மாறி உச்சரிக்கச்செய்க. |
| 2. எழுதுதல்.<br>த, த் | எழுதச் செய்வதற்கு, ர, ச, க—ஆகிய எழுத்துக்களை எழுதும் வகையை ஞாபகப்படுத்திப் புதிய எழுத்து அவற்றினின்றும் எவ்விதம் மாறுபடுகிறதென்பதைப் பிள்ளைகளிடமிருந்தே வருவித்து த க. ப.-வில் சிலரை எழுதச்செய்துகாட்டிக் கற்பலகைகளில் யாவரும் பெரிய எழுத்துக்களில் (i) சாக்குக்கட்டியாலும், (ii) பலப்பத்தாலும் எழுதச்செய்தல். எழுதும்போது சுற்றிவந்து எழுத்தின் அமைப்பைச் சரிபார்த்துத் திருத்துதல். |

## அப்பியாசங்கள்

1. முன்னறிவிற் குறிப்பிட்ட எழுத்துக்களுடன், த, த் இரண்டையும் கலந்து குவித்துக் குறிப்பிட்டுப் பொறுக்கி எடுக்கச்செய்தல்.

2. விளம்பரங்கள், சமாச்சாரப் பத்திரிகைத் தலைப்புகளடங்கிய பிரதிகளைக் காட்டி, அவற்றில் த, த் இரண்டையும் கண்டுபிடிக்கச்செய்தல்.

3. ஒரு குறிப்பிட்ட அளவில் த, த் வரும்படியான வாசகப் பிரதிகளைப் பிள்ளைகளிடம் தந்து த, த் களைப் பொறுக்கி

இத்தனை த, இத்தனை த் எனக் கூட்டச்செய்து "எண்" ஞானத்தைச் சோதித்துக் கணித பாடத்துடன் சம்பந்தப்படுத்தலாம்.

4. கொட்டைகளாலும், வர்ணக்கம்பளி (woollen) நூலாலும், பல அளவுள்ள குச்சிகளாலும், பாசிமணிகளாலும், த, த் அமைக்கச்செய்யலாம்.

5. ஸ்டென்ஸில் தகடுகளைக்கொண்டு த, த் களை வர்ணந் தீட்டி எடுக்கச்செய்வது சிறுவருக்கு மிக்க மகிழ்ச்சிதரும்.

6. மணலில், க. ப. யில், கற்பலகையில் த, த் களை, பிற எழுத்துக்களுடன் சேர்த்துச் சொல்லி எழுதச்செய்து சரி பார்க்கலாம்.

(தொடரும்.)

---

## விகடத்துணுக்குகள் (S. E. Arul Raj *H. I B.*)

1. அருள் :—அடே ராஜு, ஆபீசிலேயே சும்மா உட்கார்ந்துகொண்டு இருக்கிறயே. உனக்கு எப்படி பொழுது போகிறது?

ராஜு :—அடடே இது உனக்குத் தெரியாததா. காலையில் கிழக்கே உதிக்கிற சூரியன் சாயந்திரத்திற்கெல்லாம் மேற்கே போயிறுதடா.

* * * *

2. ஒரு பெரியவர் :—(கோமுவைப்பார்த்து கோபத்துடன்) அடே! என்ன அதிகம் பேசுகிறுப்லே இருக்கு. பல்லே உதித்திடுவேன். அப்புறம் புள்ளாண்டான்பாடு.

கோமு :—ஐயயோ, அப்புறம் நீங்கள் படும்பாடுபோல் இருக்கவேண்டியதுதான்.

* * * *

உபாத்தியாயர் :—டேய்! சும்மா எடுத்ததெற்கெல்லாம் "போர்டில் எழுது, போர்டில் எழுது!" என்கிறீர்களே, உங்களுக்கு என்னடா எனக்குத் தெரிந்ததைவிட தெரிந்துவிட்டது?

குறும்புப்பயல் :—இல்லை, சார்! நீங்கள் போர்டில் எழுதும்போது உங்கள் குடுமி ஆடுவது எங்களுக்குத் தெரிகிறது, சார்!

---

கல்வித்துறையில் கற்கும் கைவேலைகள்


(Educational Hand Work)

S. G. Naidu, *Manual Training Instructor.*


(கொத்து 31, மலர் 1, பக்கம் 22-ன் தொடர்ச்சி)

**Exercise 6.** நான்குக்கப்பல் :

Stage I — Stage II





Stage III




Stage I-ல் காட்டியிருப்பதைப்போல் ஒரு நீண்ட சதுர மான காகிதம் எடுத்துக்கொண்டு அதை நீள வசத்தில் நான்கு சமபாகங்களாக A B B A என்பவைகளைப்போல் மடித்துக் கொள்ளவும். பிறகு A என்னும் இரு பக்கங்களிலும் இருக்கும் பாகங்களை B என்பவைகளின்மேல் மடிக்கவும். பின்னர் Stage II-ல் காட்டியபடி a b c d என்னும் சிறு சதுரங்கள் ஏற்படும் படி முதலில் மடித்த நீண்ட சதுரத்தின் தலைப்பையும் அடி பாகத்தையும் மடிக்கவும். பின்னர் Stage II-ல் க, ங, என்னும் பாகங்களைப் பின்புறமாக மடித்துவிட்டு ஷை a b c d களை விரித்துவிட Stage III-ல் காட்டியபடி ஒரு நான்குக் கப்பலின் உருவத்தை அடையும்.

**Exercise 7.** இரட்டைக்கப்பல்:




ஷை நான்குக்கப்பலை Stage III-ல் காட்டியிருப்பதில் F என்னும் பக்கத்தை பின்னால் திருப்பி மடித்தோமானால் அதுதான் இரட்டைக்கப்பல் என்பது. (F என்னும் பக்கத்தை பின்புறமாகத் திருப்பி அடுத்த பக்கத்தோடு பொருந்தும்படி மடிக்கவும்.)


**Exercise 8.** காகித வீடு:



ஷை இரட்டைக்கப்பலில் A என்னும் பாகத்தை நேராக நிமிர்த்திப் பிறகு B C என்னும் முனைகளை மாத்திரம் பின்புறமாக மடித்துவிட அது ஒரு காகித வீடாகும்.

**Exercise 9.** காகிதப்பை :

Stage I Stage II




படத்தில் காட்டியபடி ஒரு நீண்ட சதுரமான காகிதம் எடுத்துக்கொண்டு அதை A B C என்று Stage I-ல் காட்டியதைப்போல் மூன்று சமபாகங்களாக மடித்துக்கொள்ளவும். பிறகு அதன் தலைப்புப்பக்கத்தில் பின்புறமாக சுமார் $\frac{3}{4}$ அங்குலத்திற்கு மடித்துவிடவும். அந்த மடித்த பாகத்தைப் படத்தில் 1, 2, 3 என்று காட்டியிருக்கிறது. இப்பொழுது A என்பதை B-யின்மேல் மடித்து பிறகு C என்பதை A-யின்மேல் மடித்து தலைப்புப்பக்கத்தில் 1 என்[illegible] உள்ளே [illegible]னும் பாகத்தை நுழைக்கவும். பிற[illegible] ங என்று [illegible] மத்தியில் மடித்து 'க' [illegible]ன்பதின்மேல் 'ங' என்ப[illegible]

182465

மடித்து தலைப்புப்பக்கத்திலிருக்கும் 1, 3, இவைகளின்கிழ் ‘ங’ என்னும் பாகத்தின் கிழ்புறத்தை நுழைக்க அது ஒரு காகிதப் பையாகும். இதில் சிறுவர்கள் சிலேட்பென்சில்கள் போட்டுக் கொள்ளலாம். கொஞ்சம் பெரியதாக மற்றொரு காகிதப்பை ஒன்று செய்து, முதலில் செய்ததற்கு மேல்மூடியாக உபயோகிக்கலாம்.

இனி சதுர காகிதங்களினால் செய்யும் நான்குக்கிண்ணம், கலியாணமேடை, கால்சட்டை, சட்டை, மிதியடி, பறவை, பாய்மரக்கப்பல், காற்றாடி, ராஜா ராணிக்கப்பல் முதலியவைகள் அடுத்த மலரில் தோன்றும்.

(தொடரும்.)

---


# சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனாம்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப்பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

| | |
|---|---|
| உள் நாடு | ரூ. 1—0—0 |
| வெளி நாடு | ரூ. 1—6—0 |

விலாசம்:—

சூப்பிரின்டென்டெண்டு.

செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,

திருச்சினாப்பள்ளி.

# 'ஹீரோக்களிலெல்லாம் சிறந்த ஹீரோ'

(சிறு கதை)

S. Ramaiyan, (Old Boy)

"அதெல்லாம் முடியாதுங்க, ஸார், முடியாது. உங்கள் 'டால்டன் பிளான்' (**Dalton Plan**) 'பிராஜெக்ட் மெதட்' (**Project Method**) எல்லாத்தையும் மூட்டையாகக் கட்டி குப்பையிலே போடுங்கள், ஸார். உங்கள் சொந்த மெதட்களை கையாண்டால்தான் வாத்தியார் என்று வெளியில் தலை தூக்கலாம். மேல் அதிகாரிகளிடத்தில் ஆளுக்குத் தகுந்தாற்போல் காகா பிடிக்கவும் கத்துக்கணும்" என்று அன்று மாலை ஆசிரிய நண்பர் கோபாலன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. "என்னே மடமை! இவ்வளவு சோம்பேறி வேதாந்தம் பேசும் பிரகஸ்பதிகளுக்கு எப்படித்தான் உத்தியோகம் கொடுத்தார்களோ! 'காகா' பிடிப்பதாம் 'காகா!' இத்தனை அடிமை மனப்பான்மைகொண்ட இவர்கள் குழந்தைகளுக்கு எப்படி வீர சுதந்திர உணர்ச்சியை ஊட்டமுடியும்? தேச முன்னேற்றத்திற்கே முட்டுக்கட்டைகளான இந்த அசடுகளுக்கு கல்வி இலாக்காவில் வருஷத்திற்கொருமுறை ஒரு பரீக்ஷையை வைத்தால் என்ன? கொஞ்சங்கொஞ்சமாக வடிகட்டிவிட்டு, என்போன்ற ஆர்வம் நிறைந்த புவர்களுக்கு வழியைத் தாராளமாகத் திறந்துவிட்டாலன்றோ, குழந்தைகள் அறிவு விசாலமாகும், தேசம் முன்னேற்றமடையும்" என்று ஆழ்ந்து சிந்தித்தான் சுந்தரம்.

சுந்தரத்திற்கு சொந்த ஊர் தஞ்சை ஜில்லாவிலுள்ள அருப்புக்கோட்டை. எளிய குடித்தனத்தில் பிறந்தவன். தாயார் விதவை. கொஞ்சம் மிகுந்த ரொக்கத்தின் உதவியால் கவர்ன்மெண்டு டிரெயினிங் ஸ்கூலில் (Government Training School) படிக்கும்போதே கல்யாணமும் ஆகிவிட்டது. குடும்பப்பாரம் தலையில் விழ, அக்கறையோடு படித்து இரண்டாவது வருஷக் கடைசியில் முதல் மாணவனாகத் தேறிவிட்டான் சுந்தரம்.

சுந்தரம் ஏழைதான். அவனுடைய உறவினர்கள் எல்லோரும் செல்வவந்தர்கள். அவனுடைய நேர் பெரியம்மா பிள்ளைதான் வாசுதேவ், ஜில்லா போர்டு மெம்பர், பிரெஸிடெண்டின் கடிவாளமும், சேர்மென்னுடைய மூக்கணாங்கயிறும் இவர் கையிலேதான். ஆகையால் இவரிடம் சென்றான் சுந்தரம் ஒரு தடவையன்று, சுமார் 50 தடவையாகிலும் நடந்திருப்

பான். கடைசியாக "நான் என்னப்பா பண்றது? எங்கு போனாலும் ஹோப்பே (Hope) கிடையாது. இப்போதைக்கு தஞ்சை, கும்பகோணம் முனிஸிபல் ஸ்கூல்களிலாவது, ஜில்லா போர்டிலாவது 'ட்ரீம்' (Dream) பண்ணுவதற்கு முதலாய் இடமில்லையப்பா. வேறு ஏதாவது பிரைவேட் மானேஜ்மெண்டு (Private Management) ஸ்கூல்களில் 'ட்ரை' (Try) பண்றது தானே" என்று வாசுதேவ் சொல்லிவிட்டார்.

என்ன செய்வான் சுந்தரம்? மனம் சலித்தான். அலையாத இடமில்லை. பார்க்காத மானேஜர் இல்லை. ஒன்றும் முடியவில்லை. ஒன்றரை வருஷமும் கழிந்தது. வறுமை தாங்க முடியவில்லை. கடைசியாகத் திருத்துறைபூண்டியில் மாடர்ன் ஹையர் எலிமென்டரி ஸ்கூலில் (Modern Higher Elementary School) ஒரு வேக்கன்ஸி (Vacancy) இருப்பதாகக் கேள்விப்பட்டு, மானேஜர், ராமச்சந்திர ஐயரைப்போய்ப் பார்த்தான். அவருக்கோ வயிறெல்லாம் பல்லு. "ஓய், இங்கே இருப்பது ஒரு வேக்கன்ஸி (Vacancy). வந்திருக்கிறது 37 அப்ளிக்கேஷன். உன்னைப் பார்த்தாலோ—பாபம், பரிதாபமாயிருக்கிறது. சரி—உனக்கே பிரிபரென்ஸ் (Preference) கொடுக்கிறேன். ஒரு அக்ரீமெண்டு எழுதும். 2 வருஷம் புரோபேஷனரி பீரியடு (Probationary Period) அதற்குள் என்னிடமிருந்து காலணா நீர் எதிர்பார்க்க முடியாது. அதற்குப் பிற்பாடு ஏதோ பார்க்கலாம். இஷ்டமானால் நாளைக்கு வந்து தெரிவித்துக்கொள்," என்று மிக ஹிதமாகச் சொன்னார். ஆசையென்பதே அறியாதவர் பாவம்!

என்ன செய்வான் சுந்தரம். மனம் இடிந்து வீடு திரும்பினான். வீட்டுக்குள் நுழைந்ததுதான் தாமதம் ஆரம்பித்துவிட்டார்கள் வீட்டின் கஷ்ட நிலையைப்பற்றிய ஒப்பாரியை சுந்தரத்தின் தாயாரும் மனைவி லலிதாவும். வெந்த புண்ணில் வேல் பாய்வதுபோலிருந்தது. காதைப் பொத்திக்கொண்டு வெளியே வந்தான். "இல்லானை இல்லாளும் வேண்டாள்—மற்றீன்றெடுத்த தாய்வேண்டாள்," என்ற பொன்மொழிகளும் ஞாபகத்திற்கு வந்தன. பெருமூச்செறிந்தான். "சே! என்ன உலகம்," என்றான்.

சுந்தரத்தின் இரு கால்களும் ஆற்றங்கரையை நோக்கிச் சென்றன. காவிரியில் பிரவாகம். காற்று 'விர்' 'விர்' என்று வீசினது. 'சோ' என்ற சப்தம். சுற்றிலும் ஒருவரையும் காணோம். உலகத்தின்மேல் வெறுப்பு அதிகரிக்க அதிகரிக்க

ஒருவித இருள் அவனைச் சூழ்ந்தது. தற்கொலை செய்யத் தீர்மானித்தான். கைகால்கள் நடுங்கின. மெய் விதிர்த்தது. மேனி வியர்த்தது. உள்ளம் ஒடுங்கிற்று. புலன்கள் அடங்கின. திடீரென்று கடவுளைப்பற்றியும் தான் செய்ய எண்ணிய பாபமான செய்கையைப்பற்றியும், தன் தாயார், மனைவி முதலியோரைப்பற்றியும் எண்ணம் பிறந்தது. அவ்வளவுதான். ஒரே மயக்கம். உலகமே சுழன்றது. அடியற்ற மரம்போல் மண்மேல் சாய்ந்தான்.

2 மணி நேரம் கழிந்தது. சுந்தரம் விழித்துப்பார்த்தான். 'கனவா? நினைவா?' எழுந்து உட்கார்ந்தான். உண்மை என்று கண்டான். மங்களகரமான மஞ்சள் காகிதமொன்று அருகில் கிடந்தது. எடுத்துப் பார்த்தான். அதில் கொட்டை எழுத்துக்களில் "**Our Employment Bureau**" (அவர் எம்ப்ளாய்மெண்ட் பீரோ) என்று எழுதியிருந்தது. அது நமது பூங்கொத்து மலரின் கடைசிப் பக்கம்—மேல் அட்டை. தூசியைத் துடைத்துவிட்டுத் துரிதமாய் வீடு திரும்பினான். மறுநாளே அப்ளிக்கேஷன் எழுதினான். வேலை கிடைத்துவிட்டது. கடைசியில் ஒரு இதழுக்கு இவ்வளவு புனித மணம் இருந்தால், பூங்கொத்து எப்படியிருக்கும் என்பது புலப்பட்டுவிட்டது. உடனே தான் சந்தாதாராகச் சேர்ந்ததுமன்னியில் புது நபர்களைச் சேர்த்துவிடும் பொறுப்பைத் தனது வாழ்க்கையின் லட்சியங்களில் ஒன்றாகக்கொண்டான். "பீரோக்களிலெல்லாம் சிறந்த பீரோ, அவர் எம்ப்ளாய்மெண்ட் பீரோ" (Our Employment Bureau).

---

## விடுகதைகள் (K. R. Savarimuthu)

1. ஆடும்போது சீறும், ஆடிக்குடத்திலடையும், மூடித்திறக்கும்போது முகத்தைக்காட்டும். அது என்ன?

2. முக்கண்ணன் சிவனே அல்ல, காய்கனி தின்றான், கட்டலைத் தின்பான், ஒன்று ஒன்றாய் இருந்ததெல்லாம் ஒன்று கூட்டும் உத்தமன் இவனே. அவன் யார்?

3. மாடு ரண்டு இழுத்துவரும் வண்டியல்ல, ஒருவன் ஓட்டிவர நொய் என்று கத்திவர, நெய் உருகிவர, சக்கை எல்லாம் பிழிந்துவர அது என்ன?

---

# ஹிட்லரின் போரும் பிரிட்டனுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளும்

A. D. M. Pragasam, B.A., L.T.

இப்பிரபஞ்சத்தில் உண்டாகும் சண்டைகளுக்கும், அக்கிரமத்திற்கும் முக்கியமான காரணம் பேராசையே. மனிதர்கள் பால் "திருப்தி" என்பது மறையுமாகில் அவர்கள் பாவத்தொழிலிலும் அக்கிரமமான வழிகளிலும் இறங்குவார்கள் என்பது நாம் கண்கூடாகக் காணும் உண்மை. இப்போது நடக்கும் கொடிய ஐரோப்பிய யுத்தம் பேராசையின் காரணத்தினிமித்தம் என்றே சொல்லலாம். ஹிட்லர் தனக்கிருக்கும் தேசம் போதாது என்றும், சிறிய நாடுகளை யெல்லாம் பறித்துத் தன் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், ஐரோப்பாவையும், முழுஉலகத்தையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற பேரவா நிமித்தமே இப்பெரிய கொடிய யுத்தத்தைத் துவக்கியிருக்கிறார். ஹிட்லரின் போருக்குக்காரணம் என்னவென்றும், நாம் பிரிட்டனுக்குச் செய்யவேண்டிய கடமைகள் எவை என்றும் பார்ப்போம். ஹிட்லரின் போருக்குக் காரணத்தைக் கண்டறியுமுன் ஹிட்லரின் முன் ஜீவிய வரலாறு நமக்குத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்.

1889-ம் வருஷம் ஆஸ்திரியாவில் ஹிட்லர் பிறந்தார். இவர் தகப்பனார் சக்கிலி வேலை செய்தார். ஹிட்லருக்குப் படிப்பில் கவலையில்லை. தன் 12-வது பிராயத்தில் தகப்பனை இழந்தார் 18-வது வயதில் தாயாரை இழந்தார். அதுமுதற்கொண்டு சித்திர மெழுதியும் வர்ணம் தீட்டியும் ஜீவனம்செய்ய ஆரம்பித்தார். பிறகு ஜெர்மன் சைனியத்தில் சேர்ந்துகொண்டு 1914 மகா யுத்தத்தில் சண்டையிட்டார். ஜனங்களை தன்வழிக்குக் கொண்டு வருவதிலும் கிளர்ச்சியுண்டுபண்ணுவதிலும் நிபுணர் ஹிட்லர். 1919ம் வருஷத்தில் அவர் "நேஷனல் சோஷியலிஸ்டு வொர்க்கர்ஸ் பார்ட்டி" ("தேசிய சமதர்ம தொழிற்கட்சி") என்ற கக்ஷியை ஆரம்பித்தார். இதற்குத்தான் நாஸிக்கக்ஷி யென்று பெயர். இக்கக்ஷி சீக்கிரத்தில் வலுத்தது. ஹிட்லரின் அதிகாரம் நாட்டில் ஓங்கிற்று. 1933-ம் வருஷம் ஹிட்லர் ஜெர்மனியின் சான்ஸ்லரானார்.

1924-ல் ஒரு கிளர்ச்சியை யுண்டுபண்ண, அது தோல்வியுறவே ஹிட்லர் சிறைக்கு அனுப்பப்பட்டார். சிறையிலிருக்கும்போதுதான் ஜெர்மனியை விஸ்தரிப்பதற்கான திட்டங்க

ளைத் தயாரித்தார். இத்திட்டங்களை "மெயின் காம்ப்" என்ற புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார்.

**ஹிட்லரின் கோள்கை:**—இரண்டு கொள்கைகளுக்கிடையோ அல்லது இரண்டு இலக்ஷியங்களுக்கிடையோ தகராறு ஏற்பட்டால் அதை மிருகபலத்தின் மூலந்தான் தீர்த்து வைக்கவேண்டும். இதுவே ஹிட்லரின் வேதாந்தம்.

ஜெர்மனியர்கள் மனிதவர்க்கத்தை ஆளக் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்பது ஹிட்லர் நம்பிக்கை. "ஜேர்மனியர்கள் ஒன்று உலகத்திலேயே சக்தி வாய்ந்தவர்களாய் விளங்கவேண்டும் அல்லது அழியவேண்டும்" என்பதே அவர் அபிப்பிராயம்.

**ஹிட்லருக்கு வேண்டியது:**—"தன் ஜனங்கள் வாழப் போதுமான நிலம்" தேவையென்கிருர். தன்காரியத்தை சாதிக்க அவர் என்னசெய்வதற்கும் தயாராய் இருக்கிருர். இவர் அனுசரிக்கும் முறைகள்:—1. மோசடி. 2. நம்பிக்கை துரோகம், எதிரியின் தேசத்தினுள் சண்டை மூட்டி விடுவது.

**ஹிட்லர் சண்டை தோடுத்ததின் காரணம்:**—ஹிட்லர் 1933-ல் சான்ஸ்லர் பதவியைப் பெற்றபோது ஜெர்மனியின் பொருளாதாரநிலை மிகக் கேவலமாய் இருந்தது. வார்ஸேலஸ் ஒப்பந்தம் அவருக்குக் கோபத்தைக் கொடுத்தது.

ஆயுதப்பரிகரணம் (Disarmament) சம்பந்தமான ஒப்பந்தத்தில் கண்டிருந்த சில விதிகளை ஆக்ஷேபித்து ஜெர்மெனியை சர்வ தேச சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளும்படிச் செய்தார். பிறகு அவர் எந்த ஒப்பந்தத்தையும் புனிதமாகக் கருதாமல் ஒன்றன்பின் ஒன்றாக எல்லாவற்றையும் மீறலானுர். இவ்வளவு யுத்ததளவாடங்கள்தான் வைத்துக்கொள்ளலாம் என்று செய்யப்பட்டிருந்த கட்டுப்பாட்டை மீறினர். தேசத்தில் கட்டாய இராணுவசேவையை அமுலுக்குக் கொண்டுவந்தார்.

## நாடுகளின் சுதந்திரம் பறிக்கப்படுதல்

1. **ஆஸ்திரியா:**—மகா யுத்தத்திற்குப் பிறகு ஆஸ்திரியா சுதந்திரம் பெற்ற நாடாயிருந்தது. ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைக்க எண்ணினர் ஹிட்லர். தன் எண்ணத்தை நிறைவேற்ற ஆஸ்திரியாவில் பலமான நாஸிகக்ஷி யொன்றை ஸ்தாபித்தார். உள்நாட்டுக் கலகத்தையும் கிளப்பி விட்டார். இந்தக் கபட வழியால் ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்துக் கொண்டார்.

2. ஸெக்கோஸ்லோவேகியா :—இரும்பும் நிலக்கரியும் அதிகம். சுதந்தரத்தைப் பறிப்பதில்லையென்று பன்முறை உறுதிமொழி கொடுத்திருந்தும் அதன்படி நடவாமல் ஹிட்லர் அதன்மேல் படையெடுத்து செக்கோஸ்லோவேக்கியாவை ஜெர்மனியின் ஆதிக்கத்திற்குட்படுத்தினர்.

போலந்து :—இன்னும் ஹிட்லரின் பசி அடங்கவில்லை. போலந்துமீது தன் நோக்கத்தை செலுத்த ஆரம்பித்தார். நவீன போலந்தின் விஸ்திரணம் 150,000 சதுரமைல். வர்ஸேல்ஸ் ஒப்பந்தத்தின்படி போலந்து சுதந்திர நாடாக இருந்து வந்தது. ஹிட்லர் போலந்துக்கு சேர்ந்த டான்ஸிக் துறைமுக நகரத்தை ஜெர்மன் சர்க்காரிடம் ஒப்புவித்து விடவேண்டுமென்று கேட்க, போலந்து கோரிக்கைகளை ஒப்புக்கொள்ளவில்லை. ஹிட்லர் போலந்தின்மீது படையெடுக்க எண்ணங்கொண்டார்.

செக்கோஸ்லோவேக்கியாவின் கதி போலந்துக்கும் நேர்ந்து விடுமென்று எண்ணி, ஜெர்மனியின் அக்கிரம செயல்களை எதிர்க்கப் போவதாய் பிரிட்டனும் பிரான்ஸும் வெளியிட்டன. பிரிட்டன் சமரஸத்திற்கு முயற்சித்துக் கொண்டிருக்கும்போதே, ஹிட்லர் போலந்தின்மீது சைனியத்தை ஏவினர். ஜெர்மன் துருப்புகள் போலந்து நகரங்களின் மீது குண்டுகளை வீச ஆரம்பித்துவிட்டன. அதனல் 1939-ம் வருஷம் செப்டம்பர்மீ 3 உ பிரிட்டிஷ் சர்க்கார் ஜெர்மனியுடன் யுத்தம் துவக்குவதாய் அறிவித்தார்கள். யுத்தம் தீவிரமாய் நடந்தது. 17 தினங்கள் போலந்திய துருப்புகள் சண்டை செய்தன. ஆனல் 17-ம் நாள் 200 விமானங்கள் வார்சாவின் மீது தொடர்ச்சியாய் 24 மணி நேரம் விடாது குண்டுமாரி பொழியவே மக்கள் மிகுந்த துன்பமடைந்தனர். இதுசமயத்தில் நாட்டில் குடிநீர் குறைந்தது. பெருவாரி நோய்கள் கிளம்பி விட்டன. ஆகவே அந்நகரம் வீழ்ந்தது.

இச்சமயம் ரஷ்யாவும் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு போலந்தைக் கொள்ளையடித்தது. போலந்து இருவராலும் பிரித்துக் கொள்ளப்பட்டது. ஜெர்மனி மிகுந்த கஷ்டப்பட்டு சம்பாதித்த நிலத்தைவிட அதிவளப்பமுள்ள பிரதேசத்தை ஒரு குண்டுகூட செலவழிக்காமல் ரஷ்யா கைப்பற்றிக்கொண்டது. போலந்தில் 85,000 சதுரமைல் ஜெர்மனிக்கும் 90,000 சதுரமைல் ரஷ்யாவுக்கும் கிடைத்தது. போலந்து வெற்றிக்கு பிறகு ஹிட்லர் சமாதானம் செய்துகொள்ள முன்வந்து சில நிபந்தனைகள் செய்தார். ஹிட்லரின் வார்த்தையில் நம்பிக்கை

யில்லாததால் ப்ரஞ்சு சர்க்காரும் பிரிட்டிஷ் சர்க்காரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஆகவே மறுபடியும் ஹிட்லர் சண்டையைத் தொடர்ந்து நடத்த எண்ணங்கொண்டார். தன்வேலை முறையை அநுசரித்து சிறிய நாடுகளை மறுபடியும் ஜெயிக்க முயன்றார். டென்மார்க் தேசம் கைப்பற்றப் பட்டது. பிறகு நார்வே தேசத்தையும் பிடித்துக் கொண்டால் வடகடல் ஆதிக்கத்தைப் பெறலாமென்று யோசனை செய்தார். நார்வே அரசாங்கத்தார் அதிகம் தயங்கினார்கள். ஜெர்மனியர் வடகடல் வழியாய் தங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்களைப் பெற்று வந்தனர். இதைத் தடுப்பதற்காகவும் ஜெர்மனிக்கு ஆகாரம் வராமல் செய்வதற்காகவும் வடகடலில் பிரிட்டிஷ்காரர்கள் காந்த சுரங்க வெடிகளை வைத்தனர். நார்வே அரசனுக்குச் சார்பாக பிரிட்டிஷ்காரர் உபயோகமற்ற போர்வீரர்களையனுப்ப, ஜெர்மனியத் துருப்புகள் அவர்களை எளிதில் மறித்துக் கொண்டு நார்வேயை ஆக்ரமித்துக் கொண்டனர். பிரிட்டிஷார் தங்கள் போர்வீரர்களைத் திரும்ப அழைத்துக் கொண்டனர்.

ஹாலந்து :—நேச தேசத்தினர், மேற்கு எல்லைப் புறத்தைப் பிறகு ஜெர்மனியர் தாக்குவார்கள் என்று எதிர்பார்த்திருந்தனர்; ஆனால் வாயுவேகமாய் ஹிட்லர் ஹாலந்து தேசத்தின்மீது படையெடுத்து விமான மார்க்கமாய் ஜெர்மனியத் துருப்புகளை இறக்கி, 5 தினங்களில் ஹாலந்தை நாசமாக்கிக் கைப்பற்றினார்.

பேல்ஜியம் :—இதன்பிறகு பெல்ஜியத்தின்மீது படையெடுத்தார். பெல்ஜிய தேசத்து துருப்புகள் மிகவும் கடுமையாய் சண்டைசெய்து வந்தனர். கடைசியில் நெருக்கடி ஏற்படவே, பெல்ஜிய தேச அரசன் சண்டையை நிறுத்தி ஜெர்மன் ஹிட்லருக்குச் சாதகமாகி விட்டார்.

பிரான்ஸ் :—பெல்ஜியம் சரணாகதியடைந்தவுடன் நேசக் கட்சியினருக்குப் பலக்குறைவு ஏற்பட்டது. ஹிட்லரின் சைன்யங்கள் மேல் ஏறி பிரான்ஸைத் தாக்கினது. அதுவும் சுமார் 12 தினங்களுக்குஅப்புறம் ஹிட்லர் கையில் விழுந்தது. பிரான்ஸின் வீழ்ச்சிக்குக் காரணம் ஹிட்லரின் மிகுந்த பலம் என்றே சொல்லிவிட முடியாது. பிரான்ஸ் தேசத்தின் சேனைத் தலைவர்கள் நாஸிக்கொள்கையையுடையவர்களாய் இருந்ததால் பிரான்ஸ் தேசத்தை ஹிட்லருக்குக் காட்டிக் கொடுத்து விட்டார்கள். இப்படிக் காட்டிக் கொடுத்தவர்களில் முக்கியமானவர்கள் பெட்டெய்ன், வேய்கெண்டு முதலியவர்களே. தற்போது சுய

பிரான்ஸ் மறைந்து, ஜெர்மன் அதிகாரத்திற்குட்பட்ட ஒரு பதுமை டிக்டேட்டர் பெட்டெய்னுல் பிரான்ஸ் பரிபாலிக்கப் பட்டு வருகிறது. ஆனுலும் பிரான்சின் தேசிய கக்ஷியினர் இங்கிலாந்தில் இருந்துகொண்டு இன்னும் சண்டையை நடத்துவதாக முயற்சித்து வருகின்றனர்.

இந்த நிலேயில், இதுவரையில் தனக்கு எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்த இத்தாலிய டிக்டேட்டரான முஸோலினி, தன்னுடைய பழய நண்பன் பிரான்ஸ் பரிதாபகரமான நிலேயிலிருப்பதையுணர்ந்தும், நம்பிக்கை துரோகமாய் ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டு பிரான்சைத் தாக்கவும் ஆரம்பித்தார். பிரான்ஸ் தேசத்தை ஹிட்லரும், முஸோலினியும் பங்கிட்டுக் கொண்டார்கள் என்று சொன்னுல் அது மிகைப்படாது.

ஆகவே இப்போது ஐரோப்பாவில் பெரும்பான்மையான பாகம் ஹிட்லருக்குச் சேர்ந்துவிட்டது. ஆனுல் ஹிட்லரின் முக்ய நோக்கமாகிய பிரிட்டனே, எப்படி வெல்லுவது என்று திகைத்து நிற்கிருர் ஹிட்லர். பிரெஞ்சுக்காரர்கள் ஜெர்மனியிடம் சரணுகதியடைந்து விட்டதால், பிரிட்டிஷ்காரர்கள் பிரெஞ்சுக் கப்பற்படைகளேயெல்லாம் ஒருங்கே பிடித்துக் கொண்டனர். பிரிட்டன் தொன்று தொட்டே “கடலின் அரசியேன்று” விளங்குகிறது. பிரிட்டனேத் தாக்குதல் என்ருல் ஜெர்மனிக்கு நல்ல கப்பற்படை வேண்டும். விமானங்களின் மூலம் இங்கிலாந்தினுள் ஜெர்மன் துருப்புகளே இறக்குவது இயலாத காரியம். ஆகவே ஹிட்லர் இப்போது தயங்குகிருர். பிரான்ஸ் கடற்கரை நாடுகளிலிருந்து கொண்டு இங்கிலாந்தின் கிழக்கு பாகத்தைத் தாக்குவதா என்று பார்க்கிருர். ஆனுல் கிழக்குபாகம் நன்ருய்ப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது. ஹிட்லருக்கு மற்ருெரு நோக்கமும் உண்டு அயர்லாந்தைப் பிடித்துக்கொண்டு அயர்லாந்திலிருந்து இங்கிலாந்தைத் தாக்கிப் பிடிக்கலாம் என்பதே. ஆனுல் அயர்லாந்தின் தலேவர் டிவேலரா இதற்கு இசையமாட்டார். ஹிட்லரை எதிர்க்கப் போதிய ஏற்பாடுகளேச் செய்து கொண்டிருக்கிருர்.

இது நிற்க, இத்தாலியும் சண்டையில் இறங்கிவிட்டது. இத்தாலிக்கு மத்திய தரைக்கடலின் ஆதிக்கம்வேண்டுமாம். பிரிட்டன் வகித்திருக்கும் ஆதிக்கத்தை தொலேக்கப்போகிறதாம். ஆகையால் மத்தியதரைக் கடலிலும், ஆப்பிரிக்காவிலும் கடும்போர் நடந்துவருகிறது. ஆப்பிரிக்காவில் இத்தாலியருக்

குரிய நாடுகளை ராயல் எய்ர் போர்ஸ் (Royal Air-Force) தாக்கு கிறது. இத்தாலிய விமானங்கள் பிரிட்டிஷ்காரருக்கு சொந்த மான, மால்டா மற்றுமுள்ள இடங்களைத் தாக்குகின்றன. ஸ்பெயின் தேசமானது நடுநிலைமையைக் கையாளுகிறது. இது கூடாதென்று ஜெர்மனி வாதித்து ஸ்பெயினைத் தங்கள் பக்கம் சேரத் தூண்டுகின்றது. மற்றும் ஆப்பிரிக்காவை எதிர்க்க ஜெர்மென் ஸ்பெயினின் வட எல்லைப்புறத்தில் 40,000 போர் வீரர்களைத் தயாராய் வைத்திருக்கிறது. இதன் முடிவு இன்னும் தெரியவில்லை.

நிற்க, ஜெர்மனியின் நேசம் இரஷ்யாவுடன் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதென்றும் தெரியவில்லை. ரஷ்யா தன் முழுக் கவனத்தையும் பால்கன் நாடுகளின்மேல் செலுத்திக் கொண்டு வருகிறது. ருமேனியா ஒரே மனதாய் நாசிக்கொள் கைகளைக் கைக்கொண்டு ஜெர்மனிக்கு பெட்ரோல் எண்ணெய் அனுப்புவதாய் ஏற்றுக்கொண்டிருக்கிறது. நேற்று பத்திரிகை யிலிருந்து நாம் தெரிந்துகொள்வது யாதெனில் இரஷ்யா கிழக் கில் தன் ஆதிக்கத்தை வளர்த்துக்கொண்டு போவதாய்த் தெரி கிறது. லட்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா இந்த மூன்று நாடுகளும் சோவியத் யூனியனில் சேர்ந்துகொண்டன.

இந்தக் கலக்கமான நிலையில் ஹிட்லர் தயங்குகிறார். ஆனால் அவர் சாமான்யப் பேர்வழியல்ல. பலவற்றைப் பேசிக் கொண்டே திடீரென்று கனடாமீது பாய்ந்தாலும் பாயக்கூடும். இன்றுவரை உலகச் சண்டையின் நிலவரம் இந்த ரீதியில் இருக் கின்றது.

“ பிரிட்டன் ஏன் இந்தச் சண்டையில் சேர்ந்தது? தன் சுயநலத்துக்காக சண்டையிடவில்லை. சமூகத்தின் நன்மைக்கு அவசியமான ஒரு கொள்கைக்காகவே போரில் இறங்கியிருக் கிறது. நாகரீக இராஜ்யங்கள் தங்கள் விவகாரங்களை சட்டரீதியாகவும், அறிவை அடிப்படையாகக் கொண்டும் தீர்த்துக்கொள்ளவேண்டுமேயொழிய மிருகபலத்தைக் கொண்டு தீர்த்துக்கொள்ளக்கூடாதென்ற கொள்கை தான் ”. (George VI) மிருகபலமும் அதிக்கிரமும் அடங்கின லொழிய உலகஸ்திதி அபிவிருத்தியடையமுடியாது. சமா தானத்திற்கு இடைஞ்சலாயிருக்கும் நாசிக் கொள்கை ஒழிந்தாலொழிய நிரந்தரமான சமாதானம் நிலவுவது சாத்யமில்லை. இது நோக்கம் பொருட்டுத்தான் பிரிட்டன் சண்டைக்கு இறங்கினது.

இந்த நிலைமையில் நாம் பிரிட்டனுக்குச் செய்யவேண்டிய கடமைகள் என்ன? அநேகருக்கு பிரிட்டன்மீது அநேக மனத் தாங்கல்கள் இருக்கலாம். பிரிட்டன் இந்தியாவிற்கு சுயராஜ்யம் தரவில்லையே ஏன் நாம் உதவிசெய்யவேண்டும் என்று சிலர் கேட்கலாம். பிரிட்டனிடத்திலிருந்து பெறக்கூடிய உரிமைகள் பிரிட்டன் வெற்றிபெற்றால்தான் நாம் பெறக்கூடும். பிரிட்டன் வீழ்ந்தால் இந்தியாவும் விழுந்துவிடும். இந்தியாவின் பாதுகாப்புக்கு பிரிட்டிஷ்காரர்களே முக்கியமானவர்கள். அவர்களில்லாவிடில் இந்தியாவின் எல்லைப்புறம் பந்தோபஸ்தான பிரதேசமாயிருக்காது. ரஷ்யர்கள் அவ்வழியாய் உட்புக நேரிடலாம். ஆகையால் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்குமுள்ள வேற்றுமை அபிப்பிராயங்களை நிவாரணை செய்து கொள்வதற்கு இது காலமல்ல. நாம் எல்லாரும் இந்த யுத்தத்திற்கு உதவவேண்டும்.

நாம் உலக மக்களுக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். உலக மக்களில் பெரும்பாலோர் ஹிட்லரின் அட்டூழியங்களால் சொல்லொண்ணுக் கஷ்டம் அனுபவித்துவருகின்றனர். நாஸி ஆட்சி சிறிய தேசங்களில் ஸ்தாபிக்கப்படுமாகில், சிறிய தேசங்களின் சுதந்திரம் பறிக்கப்படும். அநேக தேசங்களில் நாஸிக்கொள்கை பரப்பப்பட்டு மானிட வாழ்க்கைக்கே ஹானி யேற்படலாம். இந்தியர்களாகிய நாம், கஷ்டப்படும் நம் உலக மக்களுக்கு உதவிசெய்யவேண்டும். பிரிட்டன் நற்கொள்கைபற்றியும், சிறிய தேசங்களின் சுதந்திரங்களைக் காப்பாற்றும்பொருட்டுமே சண்டையிலிறங்கியிருப்பதால் நாம் பிரிட்டனுக்கு உதவியளித்தல் வேண்டும்.

நாகரீக உலகத்திற்கு நாம் செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டு. இந்தியா நாகரீகத்திற்குத் தொன்றுதொட்டே பெயர் போனது. நாகரீகமடைந்த அநேக நாடுகளின் நிலை தற்போது அபாயகரமாயிருக்கிறது. நாகரீகமடைந்த நாட்டிற்கு அணிகலமாய் விளங்குவது "சுதந்திரம்" அல்லவா. நம் நாட்டு சுதந்திரம் பறிக்கப்பட்டால் என்ன, ஐரோப்பிய நாடுகளின் சுதந்திரம் பறிக்கப்பட்டால் வித்தியாசமில்லை. நம் அயலாருக்கு வந்த துன்பம் நமக்கு வந்ததுபோலல்ல. நாஸிக்கொள்கை உலக நாகரீகத்தின் சத்துரு. உலக நாகரீகத்தைக் காப்பாற்ற நாகரீகம்படைத்த இந்தியா முன்னுக்கு வருவது அவசியம் என்ற முறையிலும் நாம் பிரிட்டனுக்கு உதவிசெய்யவேண்டும்.

மற்றும் ஒருவிதத்திலும் நாம் பிரிட்டனுக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களை நாம் கவனிப்போமாகில், இந்தியதேசம் பிரிட்டிஷார் ஆள்கையில் அடைந்த நன்மைகளை நாம் பார்க்காமலிருக்க முடியாது.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்றமகற்கு

என்ற பொய்யா மொழிப்புலவரின் செய்யுள் கருத்துப்படி நாம் பிரிட்டிஷ் ஆட்சியில் பெற்ற நன்மைகளைக் கருதியாவது, நெருக்கடியான நிலையில் பிரிட்டனுக்கு உதவவேண்டியது நம் கடமையாகும். மற்றும் நாம் செய்யக்கூடிய உதவியைக் காலதாமதமின்றி உடனே செய்யவேண்டும்.

காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்திலும் மாணப்பெரிது.

இறுதியாய் நாம் எந்தெந்த விதங்களில் பிரிட்டனுக்கு உதவிசெய்தல் முடியுமென்று நம்மில் அநேகர் கேட்கலாம். சிறியோரும் பெரியோரும், ஆடவரும் பெண்டிரும், ஏழைகளும் தனவான்களும், பலவீனர்களும் பலசாலிகளும் உதவி, எல்லோரும் உதவிசெய்யலாம்.

அருளுள்ளார் அருளீக்க
பொருள்படைத்தார் பொருளீக
வன்மைவாய்ந்தோர் படைசார்க
வசைவாய்ந்தோர் பிரச்சார்க

பணக்காரர்கள் கைம்மாறு கருதாது கொடைகளைக் கொடுக்கலாம். வேதகாரியங்களில் ஈடுபட்டிருப்பவர்களாகிய குருமார்கள் வயோதிகர்கள் ஈசனை உலகத்தில் சமாதானம் ஏற்படும்படிப் பிரார்த்திக்கலாம். வலிமை வாய்ந்து தேகபலம் படைத்தோர் பட்டாளத்தில் சேர்ந்து பிரிட்டன் சார்பாகச் சண்டை செய்யலாம். இவற்றையெல்லாம் செய்யமுடியாதவர்கள் பிரிட்டன்மீதும், ஹிட்லரின் அட்டூழியத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் அநேக ஐரோப்பிய நாட்டினர்மீதும் அனுதாபம் காட்டி, ஹிட்லரின் அட்டூழியங்களையும் நாஸிக் கொள்கையால் உலக நாகரீகத்திற்கேற்படக்கூடிய இன்னல்களையும் தெளிவுற பிறருக்கு எடுத்துப்பேசிப் பிரசாரம் செய்யலாம்.

கடைசியாய் உலகத்தில் போர் ஒழிந்து நிரந்தர சமாதானம் உண்டாக எல்லாம் வல்ல இறைவனை நாம் தினந்தோறும் பிரார்த்திப்போமாக!

## கண்டுகளித்த காட்சிகளின் மாட்சியுரை

M. Ayalusamy (*Old Student*), H. M., Ellarampunai

22-6-40 இன்று மாலே 3-30மணிக்கு நானும், எனது மாணவர்களும், ஓர் சிறு சுற்றுப்பிரயாணம் செய்து, ஆங்காங்குள்ள காட்சிகளைப் பார்க்கவேண்டும் என்று, அவாக் .கொண்டு எங்களது கழகத்திலிருந்து வடக்கு நோக்கி அணிவகுத்துப் புறப்பட்டனம்.

எங்களது பாதையோ, சாதாரண வண்டிப்பாதையாகவே இருந்தது. சிற்சில இடங்களில் மழைஇல்லாக் கொடுமையால் மரஞ்செடி கொடிகள் வளப்பமற்றிருந்தன. ஆனல் கொஞ்சத் தூரஞ் சென்றவுடன் மேற்சொன்னவற்றிற்கு மாருக கண்மாய்கள், தண்ணீரால் நிறைந்து ததும்பின. திரைகள் வந்து கரைகளின் ஓரத்தைக் கோபத்தால் திட்டு, திட்டு என்று அடித்தது. இந்தக் கண்மாயினல் என்ன பிரயோசனம் என்று ஆராய்ந்து பார்த்தோம். கண்மாயைச் சுற்றியுள்ள வயல்களும், கொடிக்கால்களும் செழுமையாயிருந்ததால் ஒருவாறு யூகித்து அறிந்து கொண்டோம்.

அதற்கடுத்தாப்போலுள்ள குஷ்டரோகிகளின் ஆஸ்பத்திரி ஒன்று தோன்றினது. அது, தமிழ் பாப்திஸ்து மிஷனைச் சேர்ந்த குஷ்டரோகிகளைப் பராமரிப்பதற்காக S. B. M. மிஷனல் கட்டப்பட்ட ஓர் சிறு பங்களா. நாங்கள் அவண் தொத்து வியாதிகளின் குணகுணங்களை எங்களுக்குள் பேசிக்கொண்டு அதை விட்டகன்ருேம். மேற்படி S. B. M. மிஷனுக்குச் சொந்தமான மற்ருெரு முக்கியமான இடம் ஆங்கிலமாதர்களால் நடத்தப்படும், பெண்பாடசாலே ஒன்றிருக்கிறது. அதில் ஏறக்குறைய 100 மாணவிகள் கல்வி கற்று வருகிருர்கள். இப்பாடசாலேயில் பாய்நெசவு, விசிறி, தையல் முதலிய கைத்தொழில்கள் நடைபெறுகின்றன.

பின், கிழக்கே 4 பர்லாங் தூரத்திலுள்ள இரண்டு பெரிய மலேகளேயும் பார்க்கவேண்டும் என்று புறப்பட்டோம். அதன் உச்சியில் போய் எங்களது விலாசத்தைக் கொத்துகளால் பொறித்தோம். அதிலுள்ள கள்ளர்கள் வசிக்கத் தக்க குகை ஒன்றைக் கண்டோம். மேலும், உரல், அம்மி, திரிகை, தூண்கள் முதலியவைகளே அங்கு கற்களிறை் செய்கிருர்கள் என்பதைத் தெரிந்து கொண்டோம்.

இப்படியிருக்க மலையை விட்டுக் கீழிறங்கி, கண்டியப்பேரி என்னும் கிராமத்தையணுகி, அங்குள்ள நந்தவனத்தைப் பார்த்துவிட்டு, சிறிது நீர் அருந்தினோம். இங்கு ஓர் பாடசாலை உண்டு. சனிவாரமானதினால் மூடப்பட்டிருந்தது.

பூங்கொத்துவாசகரும், பழையமாணவரும், எனது நண்பருமாகிய Mr. G. சூசைமாணிக்கம் என்பவரை ஞாபகப்படுத்திக் கொண்டே மேலப்புதூரை அடைந்தோம். அங்கு அவரைக் கண்டு ஒருவருக்கொருவர் வந்தனஞ்செய்து அநேக விஷயங்களைப் பற்றிப் பேசினோம். இங்கு புதிதாகக் கட்டப்பட்ட சேசுவின் திரு இருதயக் கோவில் ஒன்றிருக்கிறது. அதற்குள் அருக்கனும் அத்தகிரியை நெருங்கினபடியால், ஒருவொருக்கொருவர் பிரிவு உபசாரஞ் செய்துவிட்டு ரோட்டின் மார்க்கமாகப் போய் "தேவதாயின் பரிபூரணனே, திருஞானமந்திர ஒலனே" என்ற பாட்டைப் பாடிவிட்டு, விரைவினில் எமது ஊர் சேர்ந்து ஆலயத்தில் போய், எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சி மன்றாடி எம் எம், இல்லம் ஏகினோம்.

---

## நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

16—7—40 இப்பாடசாலை "ஆசிரியர் சங்கத்தின்" காரியக் கூட்டம் (Business meeting) சங்கத்தின் நிரந்தரத் தலைவரான சங். தலைமையாசிரியரவர்களின் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று. இவ்வருஷத்திய சங்க உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆலோசனைக்கிணங்க, திரு. A. R. Joseph அவர்கள் காரியதரிசியாகவும், திரு. பிச்சைப்பிள்ளை அவர்கள் பொக்கிஷதாரராகவும் ஏக மனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

25—7—40 இன்று, திருச்சி மேற்றிராணி ஆண்டவர் மேற்றிராணித்துவப் பட்டாபிஷேகம் பெற்ற தின ஞாபகார்த்தமாய் இப்பாடசாலைக்கு விசேஷ விடுமுறை அளிக்கப்பட்டது.

29-7-40 முதல் 31-7-40 வரை ஷை தேதிகளில் எமது ஜில்லா கல்வி அதிகாரி (D. E. O.) அவர்கள் இப்பாடசாலையைப் பார்வையிட்டனர். (The School Annual Inspection) பரிசோதனைகளின் முடிவில், அதிகாரியவர்கள் இப்பாடசாலை ஆசிரியர்களைக்கூட்டி, தாம் பார்வையிட்ட விஷயமாய்த் தமக்குண்டான மகிழ்ச்சியைக்கூறி இன்னும் இப்பாடசாலையின் அபிவிருத்திக்கான சில யோசனைகளையும் எடுத்துக்காட்டினர்.

---

A. Gnanadickam, *Music Teacher*,
St. Joseph's Higher Elementary School, Ootacamund.

## 'ட்யூபர் குலோஸிஸ்' என்னும் க்ஷயரோகம்

இந்துஸ்தான் காபி 22. ஆதி.

1. ட்யூபர் குலோஸிஸ் எ.ன்ப தே
   சுகயீன க்ஷய்.ரோ... ..க.ம்
   வ்யா....பிக் கும்பார் ம...ன்ப தை.கள்
   விரும்பார் தாம்அதைக் காண்காண் காண்
2. ஏழுக் கொரு வ.ர்இஃ தால்
   இறக்க இந்த்ய தே... ..ச.ம்
   பா....ழ டையும் பொது..மக் க.ளே
   பலுகாச் செய்எழு வீர்தாம் தாம்
3. பட்ட ணத்துள் சீ.க்கி ரம்
   படர்ந்து ஆட்கள் (நரர்) ஸ்வா... ..சப்
   பை....க ளையும் தா...க்கிக் கொல்லும்
   பரிதா பம்இது தான்தான் தான்
4. நம்மைச் சுற்றி து.ன்ப மும்
   நா.டும் பிணி க்ஷீ... ..ண.ம்
   செம்....மைப் பொருள் ந...ஷ்டம் இ.ன்றி
   ஜெகத்தில் வாழ்வோ.ம் நாம்நாம் நாம்
5. இன்பப் பிள்ளை பெ.ண்க ளை
   எளிதாய்ப் பற்றி தொ... ...ல்லை
   து....ன்ப க்ஷய ரோ...கம் கொ.ல்லும்
   சுகாதா ரவிதி பார்பார் பார்
6. திடமில் லாதோர் தே.கத் தில்
   சிறிய காற்றுப் பை... க.ளை.
   உட...னே தாக்கும் ட்யூ...பர் குலோஸிஸ்
   ஒருவி தசிறு பூச்சி கள்
7. ஈரம் தாங்கி கா.ற்றில் லா
   இருண்ட ஸ்தலங் க... ...ளில்
   திர...ண்டு வாழும் நீ...ண்ட கா.லம்
   ட்யூபர் குலோஸிஸ் பூச்சி கள்

8. க்ஷய ரோகா பு.ண்ஸச் சில்
சா.ர்ந்த தும்மல் கோ... ..ழை.
இரு...ம விஞல் சித..றும் துமியில்
இருக்கும் அனந்தம் பூச்சி கள்

9. திறந்த வெளி கா.ண்ஸச் சில்
சி.ழ்ச ளியும் கா... ..ந்து.
பறக்...கப் பூச்சி ஏ...ஐே யோ.ர்க்கும்
ப.ற்றும் கவனம்வை துப்பு முன்.

| | | | |
|---|---|---|---|
| , ஸா ஸ | ஸா ஸா | , ரி ப ம | பா ; |
| ,ட்யூபர் | குலோஸிஸ் | ,எ.ன்ப | தே ; |
| , ம ம க | ரீ ரீ | ரி க ரி ம | க ரி ஸ ஸ |
| ,சுகயீன | க்ஷய | ரோ... | . . க . ம் |
| ஸரிகரிஸாஸா † | நீ நீ | ஸாரிகரீஸா † | நி நி பா |
| வ்யா... | . பிக் கும்பார் | மன்...ப | தை.கள் |
| பஸா † நி | ஸாரி † க | ஸாஸா | ஸா ; |
| விரும்பார் | தாம்அதைக் | காண்காண் | காண் ; |

குறிப்பு :—† இந்த அடையாளம் அந்தரகாந்தரம் காகலி நிஷா தங்கள்.

ஸரிகரிஸாஸா = நான்கு அக்ஷரங்கள். பாடும்பொழுது வ்யா அஅஅஆபிக் என்று பாடவேண்டும். ஆசிரியர் நன்கு பாடிப் பழகிக் கொண்டு பிள்ளைகளுக்கும் கற்பிக்கவேண்டும். அல்லது மாணுக்கர் களில் நன்ருய் அணுக்கிப் பாடும் பாலர்களைத் தெரிந்து அவர்கள் மூலமாய் ஏனையோருக்கும் கற்பிக்கலாம். இப்பாடத்தைக் கற்பிக்கும் பொழுது சங்கீத ஆசிரியர் தாம் ஓர் பாகவதராய் பாவிக்கவும். 4, 5, 6-ம் வகுப்பு மாணவர்களையும் சேர்த்துக்கொள்ளவும். இன்னும் இதன் விஷயங்களை இந்தியா ரெட் கிராஸ்-க்ஷயரோக புத்தகத்தைப் பார்த்துக்கொள்ளவும்.

கடின பதங்கள் :

பார் = உலகம் ஜெகம் = பூமி
மன்பதைகள் = ஜனங்கள் திடம் = பலம்
பலுகா = பரவா துமி = துளி
க்ஷீணம் = குறைவு, மெலிவு.

# புத்தக விளம்பரம்

சென்னை துரைத்தனத்தாரால் எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு 1939-ம் வருஷம் வெளியிடப்பட்டுள்ள புதியப் பாடத் திட்டத்தை அனுசரித்து தற்கால நவீன முறையில் முதல் ஐந்து வகுப்புகள் வரைக்கும் உபயோகமான தமிழ்-கணக்கு, பூகோளம், இந்துதேச சரித்திரம், தோட்டவேலைகள், ஸிவிக்ஸ் முதலிய புஸ்தகங்கள் என்னால் வெளியிடப்பட்டு விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

புஸ்தகங்கள் கத்தோலிக் ஆசிரியர்களைக்கொண்டு தற்கால பாடத்திட்டத்தை அனுசரித்து வெளிவந்துள்ளன. இன்னும் என்னிடம் உயர்தரக் கலாசாலைகளுக்கு கத்தோலிக் ஆசிரியர்களால் எழுதப்பட்ட தமிழ் புஸ்தகங்கள் வெளிவந்து அனேக பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கப்பட்டுள்ளன. முதல் மூன்று பாரங்களுக்குரிய சரித்திரம், சைன்ஸ் முதலியனவும் இருக்கின்றன.

## புதிய பாடத்திட்டத்தை அனுசரித்து முதல் ஐந்து வகுப்புகளுக்கு எழுதப்பட்ட புஸ்தகங்களின் அட்டவணை

மாணவர் மணிமாலை ஒன்று முதல் ஐந்து வகுப்புகளுக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| கணக்கு | மூன்றும் வகுப்பு முதல் | | **5**-ம் | ,, |
| சிவிக்ஸ் | மூன்றும் | ,, | **5**-ம் | ,, |
| தோட்டவேலை | மூன்றும் | ,, | **5**-ம் | ,, |
| சரித்திரம் | மூன்றும் | ,, | **5**-ம் | ,, |

பூகோளம் **5**-ம் வகுப்புக்குரியது.

விபரமான கேட்லாக் வேண்டியவர்களுக்கு அனுப்பப்படும்.

கனம் பள்ளிக்கூட மானேஜர்சுவாமி அவர்களும், ஆசிரியர்களும் என்னுடைய பாடப்புத்தகங்களை தங்கள் தங்கள் பள்ளிக்கூடங்களில் வைத்து கத்தோலிக் பிரசுர கர்த்தாவாகிய என்னை ஆதரிக்கும்படியாக மிகவும் தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**A. V. D. Packiam Pillai,**
*Educational Publisher,*
TUTICORIN.

**A. V. D. பாக்கியம் பிள்ளை,**
புஸ்தக வியாபாரம்,
தூத்துக்குடி.

## யோசனு விருத்தி செய்யுள்

(Thomas J. Jesuadian Cardoza S. 2.)

ஐந்தெழுத்தால் ஆனதொரு தமிழினிய பதமதனை
அம்புவியோர் விலைமதியா ரத்தினத்துள் ஒன்றென்பர்
ஐந்தெழுத்தில் கடைநீக்கி தலையொற்றிட்டு கடையிலிருந்து
ஆய்ந்து பார்க்கின் வெண்மையான அரியதொரு உலோக
[மென்பர்
ஐந்தெழுத்தில் தலையயல் எழுத்துநீங்க உற்று நோக்கின்
அசோகர் பெருமையுடன் ஆண்டதொரு ராஜ்யமென்பர்
ஐந்தெழுத்தில் நடுநீங்கி தலையயல் அகரம் நீங்க
உகரம் ஏறின் ஐவகை நிலங்களுள் ஒன்றேயென்பர்
ஐந்தெழுத்தில் தலையயல் இரண்டும் நீங்க யோசிக்கின்
ஆதரையில் பரவியுள்ள சமயமெனும் பதமே என்பர்
அண்ணலரே ஆய்ந்து நல்ல அருமையான மொழியிதனை
அறைந்திடுவீர் அன்புடனே இன்னிசை கொள் செய்யுளாலே.

---


## " ஆரம்பக்கல்வி "

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின்
முன்னேற்றத்துக்கு உழைத்துவரும்

ஓர் மாதாந்தரப் பத்திரிகை

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனும்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ்,

94, 95, புதுத்தெருவு, மண்ணடி, மதராஸ்.


---

# மதிப்புரை

ஆரம்ப பால பாட சங்கீத வாசகம் (முதல் மூன்று வகுப்புகளுக்கு—A. C. A. ஞானதிக்கம், சங்கீத ஆசிரியர், செயின்ற் ஜோசப்ஸ் H. E. ஸ்கூல், உதகமண்டலம், மாணவர் புஸ்தகம் $4\frac{1}{2}$ அணா—ஆசிரியர் புஸ்தகம் $6\frac{1}{2}$ அணா).

இப்புத்தகத்தை நாம் பார்வையிட நேர்ந்ததோடு, அதை இயற்றிய ஆசிரியரே நேரில் வந்து அதிலுள்ள பாடல்களைப் பாடக்கேட்கும் சந்தர்ப்பம் வாய்த்ததைப்பற்றி சந்தோஷிக்கிறோம். இது வரையில் ஆரம்பப் பாடசாலைகளில் கற்பித்து வரும் அபிநயப்பாடல்கள்மாத்திரம் போதாததினால், அரசாங்கத்தார் புதிதாக சங்கீதத்தைக் கட்டாயப் பாடங்களில் ஒன்றாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்நவீன சங்கீத பாடத்திட்டத்தை அநுசரித்து சங்கீத பாட புத்தகமாக வெளிவந்த புஸ்தகங்களில் முதன்மையானது நாம் பார்வையிடும் இவ்வாசகமே.

இதிலுள்ள இராகங்கள் சிறுவர் பாடுவதற்கு சுலபமானவைகளும் கூட்டமாகப் பாடும்பொழுது இனிய உணர்ச்சி ஊட்டத் தக்கவனவாயுமிருக்கின்றன. சிறு வகுப்பினர் எளிதில் கண்டு பிடிக்கக்கூடிய பதங்கள் இனிமையான கானத்தோடு அமைந்திருக்கின்றன. விஷயங்கள் பாடத்திட்டத்தை ஒட்டியிருப்பதோடு மற்ற பாடங்களையும் தழுவினதாயிருப்பதால், ஆசிரியர்கள் போதிக்க இலகுவாயிருக்கும். அநேகமாய் பாடல்களின் அடிகள் ஓர்வித சங்கிலிக்கோர்வையாய் இயற்றப்பட்டிருப்பதால், சிறுவர் சிறுமிகள் பாராயணஞ்செய்வது மிக எளிது. சுருங்கச்சொல்லில், ஆசிரியர் தமது 34 வருஷ அநுபோகத்தில் இயற்றியுள்ள இப்பாடப் புத்தகமானது, ஆரம்ப ஆசிரியர்களுக்கு சங்கீதம் கற்பிக்கும் ஒரு கரபூஷணமாயிருப்பதோடு, மாணவருக்கும் உண்மையாகவே இன்பங்கொடுக்கும் பாடப் புத்தகமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, எமது மாதிரி பாடசாலைகளிலும் இந்தப் பாடப்புத்தகமாக ஏற்படுத்தியுள்ளோம்.

பத்திராதிபர்.


182465
சென்னை 600 008

# THOMAS SPORTS

[ *Pro: I. PONNIAH PILLAI* ]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

**TRICHINOPOLY**




***OFFICIAL STOCKISTS FOR:***

## SLAZENGER'S Ltd.

LONDON.

***The CHEAPEST HOUSE FOR:***

Spalding Australian Dunlop American Fulcrum & Japan

## TENNIS FRAMES

***WE UNDERTAKE***

RE-STRINGING, REPAIRING
RE-SHAPING & REGLUEING

***WE MANUFACTURE THE BEST & GUARANTEED***

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

**A TRIAL IS SOLICITED**

Your best Selection may be made at our Show Room.